**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.132** **நாள் : 05.09.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை சார்பாக, டெங்கு காய்ச்சல் தடுப்பு மற்றும் முறையாக கைகழுவும் பயிற்சி குறித்த விழிப்புணர்வு முகாம் ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சி. பொதுசுகாதாரத்துறை சார்பாக டெங்கு காய்ச்சல் தடுப்பு குறித்து பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள் பள்ளி, கல்லூரிகள், தொழிற் நிறுவனங்கள். குடிசைப்பகுதிகள், வணிக வளாகங்கள் மற்றும் பொதுமக்கள் பெருவாரியாக கூடும் இடங்களில் மாநகராட்சி ஆணையர் திரு.கோ.பிரகாஷ், இ,ஆ,ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி தொடர்ந்து விழிப்புணர்வு நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, அண்ணாநகர் மண்டலத்திற்குட்பட்ட செனாய் நகரில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு மற்றும் முறையாக கைகழுவும் பயிற்சி குறித்த விழிப்புணர்வு முகாம் ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (05.09.2019) நடைபெற்றது. இதில் 800 மாணவியர்கள் மற்றும் 65 ஆசிரியர்கள் பங்குபெற்றனர்.

தொடர்ந்து ஆணையாளர் அவர்கள் மாணவியர்களுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்கி சிறப்புரையாற்றி,னார். இந்நிகழ்வில், முறையாக சோப்பு உபயோகித்து 20 நொடிகள் கை கழுவுவதினால் எவ்வாறு தொற்று நோய்கள் வராமல் தடுக்க முடியும் என்பது விளக்கப்பட்டு, கை கழுவுவது குறித்து செய்முறை பயிற்சியும் அளிக்கப்பட்டது. அனைத்து மாணவியர்களும் முறையாக கை கழுவினர். மேலும், டெங்கு காய்ச்சல் பரப்ப காரணமாக இருக்கும் ஏடிஸ் வகை கொசுவின் வாழ்க்கை சுழற்சி, உருவாகும் விதம், பரப்பும் நோய்கள் மற்றும் அதன் அறிகுறிகள் குறித்து விளக்கப்பட்டன. வீட்டிலும், அதன் சுற்றுப்புறத்திலும் உள்ள டயர், தேங்காய் சிரட்டைகள், உடைந்த குடங்கள், உபயோகமற்ற பொருட்கள், உடைந்த சிமெண்ட் தொட்டிகள் முதலியவற்றில் தண்ணீர் தேங்கி கொசுப்புழு உருவாகும் வாய்ப்புள்ளதால், அதனை உடன் அகற்றுமாறும், கிணறு, மேல்நிலைத் தொட்டி,

கீழ்நிலைத் தொட்டி, தண்ணீர் தொட்டிகள் முதலியவற்றை கொசு புகாவண்ணம் மூடி வைக்குமாறும் அறிவுறுத்தப்பட்டது. மேலும், தண்ணீர் நிரப்பிய பூ ஜாடி மற்றும் கீழ்த்தட்டு, குளிர்பதன பெட்டியின் கீழ்த்தட்டு, மணிபிளான்ட் போன்றவற்றில் தேங்கி நிற்கும் தண்ணீரை வாரமொருமுறை அகற்றுமாறும் எடுத்துக் கூறப்பட்டது. மேலும், எவ்வகை காய்ச்சல் ஏற்பட்டாலும் உடன் மாநகராட்சி அல்லது அரசு மருத்துவமனையை அணுகி சிகிச்சை பெறுமாறும், மருத்துவர் பரிந்துரைத்த மருந்துச்சீட்டு இல்லாமல் நேரடியாக எந்த மாத்திரையும் உபயோகப்படுத்த வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

கொசுவின் பருவங்களான கொசுப்புழு, கூட்டுப்புழு, வளர்ந்த கொசுக்கள், கொசு உற்பத்தி ஏதுவாக உள்ள உற்பத்தி பொருட்கள் மற்றும் கொசு முட்டையிட இயலாத அமைப்புடன் கூடிய சுகாதாரமான வீட்டு அமைப்பு மற்றும் கொசுப்புழு வளர ஏதுவான அமைப்புடன் கூடிய சுகாதாரமற்ற வீட்டு அமைப்பு ஆகியவற்றின் மாதிரிகள் கண்காட்சியில் வைத்து, மாணவியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும், டெங்கு கொசு வேடமணிந்த மாநகராட்சி ஊழியரால் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில், துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ..ஆ.ப., அவர்கள், மத்திய வட்டார துணை ஆணையர் திரு.பி.என். ஸ்ரீதர், இ.ஆ.ப., அவர்கள், மாநகர நல அலுவலர் திரு..என்.ஏ.செந்தில்நாதன், சுகாதார கல்வி அலுவலர் முனைவர் டி.ஜி.சீனிவாசன், மண்டல அலுவலர் திரு.கே.பி.விஜயகுமார், கூடுதல் மண்டல சுகாதார அலுவலர் டாக்டர் ராஜ்குமார் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**